செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 337 நாள்: 10/6/17

# வேலூர் மாவட்டம்

## பத்திரிக்கைச் செய்தி

### பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயர் பதிவு செய்ய ஒரு அறிய வாய்ப்பு மற்றும் ஓராண்டிற்குள் பதிவு செய்யப்படாத பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ய திருத்தப்பட்ட விதிமுறைகள்

தற்போதுள்ள நடைமுறையின்படி, ஒரு குழந்தையின் பிறப்பு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் குழந்தையின் பெயரை இலவசமாக பதிவு செய்து கொள்ளலாம். ஓராண்டிற்குப் பின்னர் ரு.5/- தாமதக் கட்டணம் செலுத்தி பதிவு செய்யலாம். மேலும், தமிழக அரசின் உத்திரவின்படி, 01.01.2000-க்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட பிறப்பு எனில், குழந்தையின் பெயரினை பிறப்பு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 வருடங்களுக்குள் பதிவு செய்துக்கொள்ளலாம். மேற்படி கால அவகாசம் 31.12.2019 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 01.01.2000-க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட பிறப்பு எனில், 31.12.2019-க்குள் குழந்தையின் பெயரை பதிவு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு, குழந்தையின் பெயரை எக்காரணத்தைக் கொண்டும் பதிவு செய்ய இயலாது.

எனவே, பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி, தங்கள் குழந்தையின் பெயர் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லையெனில் உடனடியாக பிறப்பு நிகழ்ந்த இடத்தின் பிறப்பு, இறப்பு பதிவாளரை அணுகி குழந்தையின் பெயரை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், நிகழ்வுற்ற ஓராண்டு கால அளவிற்குள் பதிவு செய்யப்படாத எந்தவொரு பிறப்பு மற்றும் இறப்பை, நீதித்துறை முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் ஆணையின் அடிப்படையிலும், கால தாமதக்கட்டணம் ரு.10/- செலுத்துவதன் பேரிலும் மட்டுமே இதுவரை பதிவு செய்யப்பட்டு வந்தது.

தற்பொழுது பிறப்பு, இறப்பு பதிவு விதிகளில் கூறப்பட்ட திருத்தத்தின்படி பிறப்பு, இறப்பு நிகழ்வுற்று ஓராண்டிற்கும் மேலாகியிருந்தால், அதனை பதிவு செய்வதற்கு நீதிமன்றத்திற்கு சென்று அனுமதி பெறுவதற்கு பதிலாக, 25.01.2017-க்கு பிறகு சம்மந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர் நிலைக்கு குறையாத செயல் நடுவரின் அனுமதி பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.

மேற்படி நடைமுறைகளை பின்பற்றி ஓராண்டு கால அளவிற்குள் பதிவு செய்யப்படாத பிறப்பு, இறப்புகளை வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் வருவாய் கோட்டாச்சியர் அலுவலகங்களை அணுகி பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் பிறப்பு, இறப்பு பதிவு குறித்த கூடுதல் விவரங்களைப்பெற, மாநகராட்சி, நகராட்சி, பேருராட்சி, தாலுக்கா அலுவலகங்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8/6/17

துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மற்றும்
மாவட்ட கூடுதல் பிறப்பு இறப்பு பதிவாளர்,
வேலூர்.

மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும
மாவட்ட பிறப்பு இறப்பு பதிவாளர்,
வேலூர்.

8/6/17
AD

8/6

மாவட்ட ஆட்சியர்,
வேலூர்

10/6/17

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.